# அமிர்தா பல்கலையில் சர்வதேச பொறியியல் மாநாடு

கோவை, ஏப்.25: கோவை அமிர்தா பல்கலையில் சுற்றுச்சூழல் பேரழிவை தடுக்கும் விதமாக வளர்ந்து வரும் உள்கட்டமைப்புகளில் நிலையான தொழில் நுட்பத்தை பயன்படுத்துவது குறித்த 2 நாள் சர்வதேச மாநாடு நடந்தது. இதில் பொறியியல் துறையில் சிறந்து விளங்கும் 150க்கும் மேற்பட்ட முன்னணி கல்வியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர்.



அமிர்தா பல்கலையில் சுற்றுச்சூழல் பேரழிவை தடுக்கும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்த 2 நாள் சர்வதேச மாநாடு நடந்தது. இதில், அமிர்தா பல்கலை சிவில் பொறியியல் துறை தலைவர் மினி பேசினார்.

இதில் நவீன கண்டுபிடிப்புகள், வளர்ந்து வரும் நாடுகளில் உள்கட்டமைப்பு குறித்த போக்குகள், அதில் உள்ள சவால்கள் மற்றும் அதை எதிர்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளிட்டவை குறித்து விவாதித்தனர். இதில், அமிர்தா பல்கலை சிவில் பொறியியல் துறை தலைவர் மினி தலைமை வகித்தார்.

இந்தியா, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் குவைத் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த பல்கலை கழகங்களில் இருந்து 150க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் பெறப்பட்டன. பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் நிறுவன பேராசிரியர் சீதாராம், சிங்கப்பூர் தேசிய பல்கலை சிவில் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் துறை பேராசிரியர் சியூசென்சியான் மற்றும் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த யுபிசி பார்சிலோனா டெக் பேராசிரியர் ஆலன் பேட்மேன் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட பொறியியல் வல்லுனர்கள் பங்கேற்றனர்.